இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 21.07.2026

# அவர்களாக முன் வந்து சேர்கிறார்களா?

“குதிரை பேர விவகாரத்தில் மக்களுக்கு கோபம் வர வேண்டும். பிற கட்சிகளை உடைத்து அதன் மூலம் பா.ஜ.க. தங்களது பலத்தை அதிகரிக்கின்றனர். ஆனால் இங்கே இவர்கள் ராஜினாமா செய்து விட்டு கட்சி மாறுகின்றனர். அதையும் இதையும் சம்பந்தப்படுத்தக் கூடாது” என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் சண்முகம் கண்டுபிடித்திருக்கிறார். உண்மையறியும் கருவியைத் தோளில் தொங்க விட்டுள்ளார் போலும்!

**11.7.2026 அன்று பேட்டி அளித்த முன்னாள் அமைச்சர் கரூர் எம்.ஆர். விஜயபாஸ்கர், “விஜய் தலைமையிலான அரசு எங்கள்ட்ட அப்ரோச் பண்ணுனாங்க. 42 ஆண்டு காலம் நான் உறுப்பினரா இருந்திருக்கிறேன். பல பதவிகள்ல இருந்திருக்கேன். உள்ளாட்சியில இருந்து ... அமைச்சர்ல்ல இருந்து பல பதவியில இருந்திருக்கேன்...” என்று வெளிப்படையாகப் பேட்டி கொடுத்தார். இது அனைத்து ஊடகங்களிலும் வந்துள்ளது. இது தானாக முன் வந்து விலகியதா? இல்லை. முதலமைச்சர் விஜய் சொல்லித்தான் விலகியதாக கரூர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் சொல்லி இருக்கிறார்.**

ம.தி.மு.க. பொதுக்குழு 27.6.2026 அன்று சென்னையில் கூடியது. அதன்பிறகு நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைகோ வெளிப்படையாக குதிரை பேரம் நடந்ததை ஒப்புக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

நிருபர்: **நீங்கள் முதலமைச்சரைச் (விஜய்) சந்தித்தீர்களா?**

வைகோ: **ஆமா. சந்திச்சேன்.**

நிருபர்: **ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை ராஜினாமா செய்யச் சொல்லுங்கள், நான் பிரச்சாரம் பண்றேன்னு முதலமைச்சர் விஜய் சொன்னதாகச் செய்தி வந்ததே...?**

வைகோ: **ஆமாம். ரெண்டு எம்.எல்.ஏ.க்களும் ராஜினாமா செய்தால் இடைத்தேர்தல் வரும். அப்படி ஒரு இடைத்தேர்தல் வந்தால் நானே வந்து உங்களுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்வேன் என்று முதலமைச்சர் என்னிடம் சொன்னார். .... ஆனா அந்த ரெண்டு பேர்ட்ட (கடையநல்லூர் தி.மு. இராசேந்திரன், சீர்காழி செந்தில் செல்வன்) சொன்ன போது செந்தில் செல்வன் பதிலே சொல்லல. ‘நான் தி.மு.க.வுல தான் இருக்கப் போறேன்னுட்டு’ போயிட்டாரு. ராசேந்திரன், ‘நான் ம.தி.மு.க.வா தான் இருக்கேன். ஆனா எம்.எல்.ஏ.வாக தொடர்றேன்னு’ சொல்லியிருக்காரு.**

- இதுதான் வைகோ அளித்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். இது அனைத்து ஊடகங்களிலும் வெளியானது. ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் இருவரையும் விஜய் தான் ராஜினாமா செய்யச் சொன்னார் என்று வைகோவே சொன்னார். இது குதிரை பேரம் அல்லவா?

இந்தப் பேட்டிக்கு முன்னதாக நடைபெற்ற பொதுக்குழுவில் வைகோ பேசிய பேச்சின் காட்சிகள் அவரது கட்சியினரால் வெளியில் பரப்பப்பட்டது. “நேத்து காலைல ராசேந்திரனையும், செந்தில் செல்வனையும் கூப்பிட்டு, ரெண்டு பேரும் ராஜினாமா செய்தா ஜெயிக்க வைக்கிறேன்னு சி.எம். சொல்றாரு... ராஜினாமா செய்றீங்களா என்று நான் கேட்டேன். ரெண்டு பேரும் பதில் சொல்லல. எனக்கு நேரம் ஆகிவிட்டது என்று சொல்லி விட்டு நான் போய்விட்டேன். உயர் நிலைக் குழு நடந்த போது என்னிடம் தனியாகப் பேச வேண்டும் என்று ராசேந்திரன் சொன்னார். ‘ராஜினாமா செய்தால் ஜெயிக்க முடியாது’ என்று ராசேந்திரன் சொன்னார். ‘அண்ணா தோற்கலையா? அடியேன் தோற்கலையா?’ என்று நான் சொன்னேன். ‘உங்களை இதை விட உயர்ந்த இடத்தில் நான் உட்கார வைப்பேன்’ என்றேன். ஆனால் பதில் சொல்லாமல் போன ராசேந்திரன் போனை சுவிட்ச் ஆப் செய்து விட்டார்” என்று பேசி இருக்கிறார். இந்தக் காட்சிகளும் வீடியோக்களாக வந்துள்ளது.

**‘நீங்கள் இருவரும் ராஜினாமா செய்தால், அதன்பிறகு நடக்கும் இடைத்தேர்தலில் நான் வந்து பிரச்சாரம் செய்கிறேன்’ என்று விஜய் தன்னிடம் சொன்னதாக வைகோ சொன்னது விஜய் நடத்திய அப்பட்டமான குதிரை பேரம் அல்லவா?**

ராஜினாமா செய்யுங்கள், அதே இடத்தில் நீங்களே நிறுத்தப்படுவீர்கள் என்பது தானே பேரம்?

அதை விட பெரிய பேரம் நடத்தியதை வைகோவே ஒப்புக் கொள்கிறார். ராஜினாமா செய்ய மறுத்த கடையநல்லூர் தி.மு.ராசேந்திரனிடம், ‘ இதை விட உயர்ந்த இடத்தில் நான் உங்களை உட்கார வைப்பேன்’ என்று வைகோ சொன்னது எதை மனதில் வைத்து? ‘அமைச்சர் ஆக்குகிறேன்’ என்பது தானே? அந்த வாக்குறுதியையும் வைகோவுக்கு விஜய் கொடுத்துள்ளது இதன் மூலம் அம்பலம் ஆகவில்லையா?

**இவை எல்லாம், ‘வைகோ சொன்னாராம்’ என்பது மாதிரியான கற்பனைகள் அல்ல. அவரே பொதுக்குழுவில் பேசியவை. பொதுக்குழுவுக்குப் பிறகு பேட்டி அளித்தவை. சமூக ஊடகங்களில் இவை அனைத்தும் கிடக்கின்றன. குதிரை பேரத்தை யாரோ ஒரு த.வெ.க. அநாமதேயம் நடத்தவில்லை. முதலமைச்சர் விஜய்யே நடத்துகிறார் என்பதற்கு வைகோ கொடுத்துள்ள ஒப்புதல் வாக்குமூலம் இவை. சண்முகத்துக்கு சந்தேகம் இருந்தால் வைகோவிடம் கேட்டுக் கொள்ளட்டும். ராஜினாமா செய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதும்.**

விஜய் ஆட்சிக்கு ஆதரவாக 25 அ.தி.மு.க. உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள். இவர்களுக்கு அமைச்சர் பதவி தருகிறேன், வாரியத் தலைவர் பதவி தருகிறேன் என்று ஏமாற்றி அவர்கள் ஆதரவைப் பெற்றார் முதலமைச்சர் விஜய். வோட்டுப் போட்டதும் அவர்களுக்கு ‘அல்வா’ கொடுத்தார். அதில் 19 பேர் மீண்டும் அ.தி.மு.க.வுக்கே போய்விட்டார்கள். இது அப்பட்டமான பேரம் அல்லவா?

இதை அ.தி.மு.க.வின் சொந்தக் கட்சிப் பிரச்சினையாகப் பார்க்க முடியாது. எடப்பாடி பழனிசாமி மீதான உண்மையான கோபம் என்றால் அவர்கள் மீண்டும் எடப்பாடி பழனிசாமி தலைமையை ஆதரித்து போயிருக்க மாட்டார்கள். விஜய் ஆசை வார்த்தையை நம்பி வந்தார்கள். அது நிறைவேறவில்லை என்றதும் போய்விட்டார்கள். இது கூடவா புரியவில்லை?

**விராலிமலை விஜயபாஸ்கருக்கும் கரூர் விஜயபாஸ்கருக்கும் கிளீன் சர்டிபிகேட் கொடுக்கும் வேலையை மார்க்சிஸ்ட் சண்முகம் பார்க்கத் தொடங்கி இருப்பது மகத்தான மாற்றம் தான்!**

## 47ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது

# பிள்ளையாக நான் ஊட்டி வளர்த்த கழக இளைஞர் அணி!

### இளைஞர் அணியினருக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, ஜூலை 21 -**

**பிள்ளையாக நான் ஊட்டி வளர்த்த கழக இளைஞர் அணி 47ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. கழக இளைஞர் அணி தம்பிமார்கள் அனைவருக்கும் பாராட்டுகள் என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

கழக இளைஞர் அணி 47ஆவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**பிள்ளையாக நான் ஊட்டி வளர்த்த DMK_YouthWing 47 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது!**

**அன்பகத்தில் தனி அலுவலகம், தமிழ்நாடு முழுவதும் கிளை வரை நிர்வாகிகள், முரசொலியில் பாசறைப் பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம் எனக் கழகத்தின் முன்வரிசைப் படையணியாகப் பணியாற்றி வரும் இளைஞரணியின் தம்பிமார்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.**

**இனி வரும் காலம் முன்பைவிட இளைஞரணி இருமடங்கு உழைக்க வேண்டிய காலம். உழைப்பைக் கொடுப்போம், கழகம் காப்போம், தமிழ்நாடு காப்போம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



## ஜி.வி.மார்க்கண்டேயன் கைது:

# ஆளுங்கட்சிக்கு ஒரு நியாயம், எதிர்க்கட்சிக்கு ஒரு நியாயமா?

### முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

**சென்னை, ஜூலை 21 -**

**கழக சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன் கைது குறித்து முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், தமது சமூக வலைதளத்தில் “ஆளுங்கட்சிக்கு ஒரு நியாயம், எதிர்க்கட்சிக்கு ஒரு நியாயமா?” என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள் தங்கள் மீதான விமர்சனத்தை எளிதில் கடந்து சென்று விடுவார்கள்.

அவர்கள் வழிவந்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தன்னைப் பார்த்து முட்டாள் முதல்வரே என்று ஒருவர் விமர்சித்தபோது முட்டாள் இப்படித்தான் பேசுவான் என்று கடந்து சென்றார்.

CM Sir .. நீங்களோ மாண்பு நிறைந்த சட்டப்பேரவையில் உங்கள் அப்பாவை எங்கே காணோம்? என்று நையாண்டி செய்கிறீர்கள்.

**ஆணவமாய் பேசும் முதல்வர்!**

ஐந்து நிமிடம் பேச்சில் முன்னாள் முதல்வரை கொத்து புரோட்டா போட்டு விட்டேன் என்று கொக்கரிக்கிறீர்கள். ஆதாரம் இன்றி பார்ட்டி பண்ட் என்று பேசி ஆனந்தப்படுகிறீர்கள்.

கரூர் பொதுக் கூட்டத்திலே ஓடு ஓடு ஓடு ஓடு என்று அங்க அசைவுடன் பாட்டு பாடி இனி சட்டமன்ற கதவை பூட்டுவேன் என்று ஆணவமாய் பேசுகிறீர்கள்.

நீங்கள் என்ன மொழியில் பேசினீர்களோ அதே மொழியில் பதில் தந்துள்ளார் மார்க்கண்டேயன். எங்களை சட்டமன்றத்திற்குள் பூட்டி வைத்து ஏதாவது செய்ய நினைத்தால் எங்கள் கை பூ பறிக்கவா செய்யும்? என்று தற்காப்பு உணர்வுடன் அவர் பேசியுள்ளார்.

முட்டாள் முதல்வரே என்று பேசியவர்க்கும், தம்பி குடும்பத்தை வீடு புகுந்து தாக்கியவருக்கும், லட்சக்கணக்கானோர் திரண்ட மைதானத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியவருக்கும் அமைச்சர் பொறுப்பு கொடுத்து அழகு பார்க்கும் நீங்கள், உங்கள் கட்சியினருக்கு ஒரு நியாயம்? எதிர்கட்சியினருக்கு ஒரு நியாயமா?

உதவி கேட்டு வந்த த.வெ.க. இளம் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்தவரை எம்.எல்.ஏ.வாக உங்கள் கட்சியில் தொடர பெருந்தன்மையுடன் அனுமதித்து உள்ளீர்கள்.

உங்களோடு இருப்பவர்களின் குற்றங்களை பொறுத்துக்கொள்ளப் பழகிய உங்களுக்கு எதிர்க்கட்சியினரின் விமர்சனத்தை ஏற்கும் மனப்பக்குவம் இல்லாமல் போனது ஏன் ?

தலைவர்களின் படங்களை வெறுமனே அலங்கரித்தால் மட்டும் போதாது. அவர்களது பண்பும் வரவேண்டும் CMSir !

இவ்வாறு மு.அப்பாவு அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## பருவமழை பலவீனம் எதிரொலி: அறிவிக்கப்படாத

# மின்வெட்டு மேலும் அதிகரிக்கும் அபாயம்!

*சென்னை, ஜூலை 21 -*

*தென்மேற்கு பருவமழை பலவீனமாக உள்ளதால், தமிழ்நாட்டின் நீர் மின் நிலையங்களில் மின்சார உற்பத்தி 50 சதவீதம் வரை சரிந்துள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் நிலவி வரும் அறிவிக்கப்படாத மின்வெட்டு, மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.*

*தமிழ்நாட்டில் உள்ள நீர் மின் நிலையங்கள் மாநிலத்தின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் நீலகிரி, கோவை, உள்ளிட்ட மலைப் பகுதிகளில் 2 ஆயிரத்து 300 மெகாவாட்டிற்கும் அதிகமான திறன் கொண்ட 40க்கும் மேற்பட்ட நீர் மின் நிலையங்கள் இயங்கி வருகின்றன.*

*தமிழக நீர்மின் நிலையங்களில் கடந்த ஆண்டு ஏப்ரல் 1 முதல் ஜூலை 17 வரையிலான காலகட்டத்தில் ஆயிரத்து 509 மில்லியன் யூனிட் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. ஆனால், நடப்பாண்டில் அதே காலகட்டத்தில் வெறும் 751 மில்லியன் யூனிட் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.*

*இதனால், தமிழ்நாட்டில் கடும் மின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.*

*இதனை சமாளிக்க முடியாமல் திணறி வரும் தவெக அரசு, கடந்த சில மாதங்களாக ஒரு யூனிட்டிற்கு 16 முதல் 20 ரூபாய் வரையிலான விலையில் தனியார் நிறுவனங்களிடம் இருந்து மின்சாரத்தை வாங்கி வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.*

*இருப்பினும், தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவி வரு கிறது.*

*இந்நிலையில், நீர்மின் உற்பத்தி 50 சதவீதம் வரை சரிந்துள்ளதால், அறிவிக்கப்படாத மின்வெட்டு மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.*



ஆளும் அரசின் தூண்டுதலின் பேரில் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் முன் முன்னாள் அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பெ.கீதாஜீவன், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் உள்ளிட்ட கழகத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.